# ஓஎன்ஜிசி பொதுப்பள்ளி

## நிரவி-காரைக்கால்-609604

**வகுப்பு : ஏழாம் நிலை (அ/ஆ/இ )**

**பாடம் : தமிழ் - இரண்டாம் மொழிப்பாடம், பயிற்சித் தாள் -1 2022-2023**

**பகுதி –அ படித்தல் திறன்**

**1.பின்வரும் பத்தியைப் படித்து அதன் கீழ் வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்வு செய்க.**

நீர்யானை பகல் முழுவதும் நீரிலும் இரவில் தரையிலும் வாழும். ஆப்பிரிக்காவின் வெப்ப மண்டலப் பகுதியிலுள்ள நதிகளிலும் ஏரிகளிலும் இவை வாழும். சராசரியாக நீர்யானையின் எடை மூன்று டன். நீர்யானைகள் கூட்டங்கூட்டமாக வாழும் இயல்பின. சிங்கம், சிறுத்தை, கழுதைப்புலி ஆகியவை நீர்யானைக்குட்டிகளுக்கு எதிரிகளாகும். எதிரிகளின் ஆபத்திலிருந்து தம் வாழ்வைக் காத்துக்கொள்ளும் நீர்யானைகள் ஐம்பது ஆண்டுகள் வரை உயிர்வாழும். நீர்யானைகளின் இறைச்சி ஆப்பிரிக்கப் பழங்குடி இனத்தவருக்கு மிகவும் விருப்பமான உணவாகும். நீர்யானைகளில் குள்ள நீர்யானைகள் என்ற ஒரு வகை உண்டு. அவை பிக்மி என்று அழைக்கப்படுகின்றன. நீர்யானைகளின் தந்தங்கள் யானையின் தந்தத்தைப்போல உறுதியானவை அல்ல. விலையும் அதிகம் இல்லை. ஹிப்போபொட்டோமஸ் என்ற கிரேக்கச் சொல்லிற்கு நதிக்குதிரை என்பது பொருளாகும். பெரிய உருவில் திகழும் நீர்யானைகள் உண்ணும் உணவின் அளவு மிகவும் குறைவு என்பது விந்தையான செய்தியாகும்.

1. ஹிப்போபொட்டோமஸ் என்பதன் பொருள் யாது?

   அ) வரிக்குதிரை ஆ) நதிக்குதிரை இ) மதிக்குதிரை

2. நீர்யானைகள் வாழ்நாள் எத்தனை ஆண்டுகளாம்?

   அ) ஐம்பது ஆ) முப்பது இ) நாற்பது

3. நீர்யானைகள் எவ்வாறு வாழும் இயல்பின?

   அ). தனித்தனியே ஆ) கூட்டங்கூட்டமாக இ) மற்ற மிருகங்களுடன் இணைந்து

4. நீர்யானைகள் எந்தநாட்டுப்பகுதியல் வாழ்கின்றன?

   அ) அமெரிக்காவில் ஆ) ஆஸ்த்ரேலியாவில் இ). ஆப்பிரிக்காவில்

5. நீர்யானையின் சராசரி எடை எவ்வளவு?

   அ). ஐந்து டன் ஆ) ஆறு டன் இ) மூன்று டன்

**2. செய்யுள் வினாவிற்கு விடையளி.**

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வல்வார்
எச்சம் எனவொருவன் மக்கட் செய்வன
விச்சை மற்று அல்ல பிற.

**வினாக்கள்:**

1. இப்பாடலின் தலைப்பு என்ன?

   அ. இன்பத்தமிழ்க் கல்வி ஆ. புலி தங்கிய குகை இ. ஆழியாச் செல்வம்

2. விச்சை என்பதன் பொருள் என்ன?

   அ. கல்வி ஆ. பொருள் இ. புலி

3. கல்வியைப் போல் ---------------- செல்வம் வேறில்லை.

   அ. விலையில்லாத ஆ. கேடில்லாத இ. உயர்வில்லாத

4. இப்பாடலின் ஆசிரியர் யார்?

   அ. பாரதிதாசன் ஆ. குமரகுருபரர் இ. சமணமுனிவர்

5. ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் -------------------

   அ. வீடு ஆ. கல்வி இ. அணிகலன்

3. **பின்வரும் மனப்பாட குறட்பாக்களைச் சரியான சீர்களால் நிரப்புக.**

1. அவ்விய ------------------ ஆக்கமும் செவ்வியான்
   கேடும் நினைக்கப் படும்.
   அ. வஞ்சத்தான் ஆ. நெஞ்சத்தான் இ. கஞ்சத்தான்
2. ---------------- குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
   தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.
   அ. அறிதிலார் ஆ. ஆன்றோர் இ. ஏதிலார்
3. அருட்செல்வம் செல்வத்துள் -------------- பொருட்செல்வம்
   பூரியார் கண்ணும் உள.
   அ. செல்வம் ஆ. வீரம் இ. கல்வி
4. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
   வகுத்தலும் --------------------- அரசு..
   அ. வல்லது ஆ. நல்லது இ. சொல்லியது

**பகுதி –ஆ எழுதுதல் திறன்**

4. **ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக.**

1. இந்திய வனமகன்
2. கப்பலோட்டிய தமிழர்
3. பள்ளி மறுதிறப்பு

5. **பின்வரும் படம் பார்த்து உன் சொந்த நடையில் எழுதுக. (பத்து வரிகளுக்கு மிகாமல்)**

